# ஆண்டுக்கு 1.2 கோடி பேர் பயனடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 25 ஆயிரம் இ.சேவை மையங்கள்!

## பேரவையில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதிலுரை...

5–ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டிற்குள்தான் இருக்க வேண்டும். பணம் சம்பாதிக்கும்போது எங்கே வேண்டுமானால் சம்பாதிக்கலாம். இது private company இல்லை; Government company என்ற அடிப்படையில் தமிழ்நாட்டிலேயே கூடுதலாக பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

இந்த iTNT hub என்ற Innovation and Technology of Tamil Nadu என்ற முயற்சியை அதுவும் நான் நிதியமைச்சராக இருந்தபோது, அன்றைக்கிருந்த தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அருமை சகோதரர் மனோ தங்கராஜ் அவர்களோடு இணைந்து, ஒன்றிய அரசாங்கத்திடம் நிதி பெற்று, அதை உருவாக்கியிருக்கிறோம். இன்றைக்கு நம்முடைய நிறுவனம் அவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசாங்கம் கூடுதல் நிதி கொடுத்து, கூடுதல் திட்டங்களை நம்முடைய நிறுவனத்திடம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கிறார். அதனால் அது மிகவும் fast ஆக expand ஆகிக் கொண்டிருக்கிறது. DeepTech startups, innovationநிறைய ஒப்பந்தம், வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் incubatorsஉடன் போட்டு, இது ஒரு Centrehub for resources for startups. பல பல்கலைக்கழகங்கள் இருக்கிற patents, இருக்கிற கருவிகள், இருக்கிற ஆராய்ச்சி மையங்களை இந்த Startup நிறுவனங்கள் பயன்படுத்தும் வகையில் JIGSAW என்ற ஒரு முயற்சியைக் கொண்டு வந்திருக்கிறோம். Resource allocation and sharing எல்லாம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்த வகையில் இந்தத் துறையில் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். இந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்தேன். சுமார் 100 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அதில் 27 பொதுவாக கருத்து அடிப்படையில் எந்தக் கோரிக்கையும் இல்லாமல் வந்திருக்கின்றன. 38 தொழில்நுட்ப பூங்கா வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன. நான் பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்வது, இனிமேல் அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இந்தத் துறைக்கு அனுப்பாமல், தொழில் துறைக்கு அனுப்பிவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது உண்மையை சொன்னால், அதை அரசியலாக்கிவிடுகிறீர்கள். Actually, அது இந்தத் துறைக்கு வந்திருக்கக் கூடாது. 12, 13 வருடங்களாக இதே வழியில்தான் நடந்து கொண்டிருக்கிறது. 10 வெட்டுத் தீர்மானங்கள் இசேவை பற்றி கோரியிருக்கிறார்கள். நான் கூற விரும்புவது, ஏற்கெனவே 7,000 இருந்ததை கிட்டத்தட்ட 28,000 என்றளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். அதனால் யாரெல்லாம் முன் வந்து இசேவை மையம் நடத்த வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களுடைய இலக்கு கிராமப்புறங்களில் யாருக்கும் 2, 3 கிலோ மீட்டருக்கு மேல் பயணிக்க தேவை இருக்கக்கூடாது. நகர்புறங்களில் 1 கிலோ மீட்டருக்குள்ளேயே ஒரு இசேவை மையம் இருக்க வேண்டும். யாருக்கெல்லாம் தேவையோ, எத்தனை சேவைகளை அதில் செய்ய முடியுமோ, infact நான் கூற விரும்புவது, போக்குவரத்துத் துறை அமைச்சருடன் இணைந்து ஒரு திட்டத்தை செயல்படுத்தவிருக்கிறோம். அடுத்த வாரம் அறிவிக்கவிருக்கிறார். பேருந்து சேவைக்கும் ticketகளை இசேவை மூலமாக onlineல் வாங்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) Internet connection வீடுகளில் இல்லாதவர்களுக்கு இசேவை. இல்லையென்றால் வீட்டில் உட்கார்ந்தபடியே அரசாங்கத்தினுடைய website க்குள் சென்று வாங்கலாம். சில கோரிக்கைகள் BSNL cell tower. அவை அல்லாமல், TACTVல் welfare association மற்றும் TACTVயினுடைய rate எல்லா அரசாணைகளும் இணையதளத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல கோரிக்கை வந்திருக்கிறது. இத்தகைய கோரிக்கைகளையெல்லாம் இந்த மானியக் கோரிக்கையிலோ, இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டமிடவில்லையென்றாலும் இவையெல்லாம் செலவு அவ்வளவாக இருக்காது என்ற காரணத்திற்காக, இந்தக் கருத்துகளையெல்லாம் உள்வாங்கி எப்போது வாய்ப்பு கிடைக்கிறதோ இதனை செயல்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை கூறிக்கொள்கிறேன்.

எனவே, அந்த அடிப்படையில் உறுப்பினர்கள் என் துறையைச் சார்ந்து வைத்த அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் நாங்கள் முடிந்த அளவிற்கு பரிசீலனை செய்து நிறைவேற்றுவோம் என்று நான் கூறி, எனவே அதை திரும்பப் பெற வேண்டுமென்று கூறி சில அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு நான் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்!**

**1) ஆதார் சேவைகளை மக்கள் எளிதில் பெறும் வகையில் கூடுதலாக 50 புதிய ஆதார் பதிவு மையங்களைத் தொடங்குதல்.**

தமிழ்நாட்டிலுள்ள ஆதார் பதிவு முகமைகளில், தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் (ELCOT) ஒரு முகமையாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது, இந்நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள 266 ஆதார் பதிவு மையங்களில் (Aadhaar Enrollment Centres), 38 மையங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், 14 மையங்கள் மாநகராட்சித் தலைமை அலுவலகங்களிலும், 34 மையங்கள் மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும், 112 மையங்கள் நகராட்சி அலுவலகங்களிலும், 31மையங்கள் வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும், 14 மையங்கள் பேரூராட்சி அலுவலகங்களிலும், 23 மையங்கள் பிற இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

ஆதார் சேவைகளை மக்கள் எளிதில் பெறும் வகையில், தமிழ்நாட்டின் பல்வேறு உள்ளாட்சி அலுவலகங்களில் தேவைக்கேற்பக் கூடுதலாக 50 ஆதார் பதிவு மையங்களைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) ஏற்படுத்தும்.

ஏற்கெனவே பல இலட்சம் பேர் இந்த சேவையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 50 மையங்கள் உருவாக்குகிற மாதிரி, ஒரு கோடி மக்களுக்கு மேல் ஏதோ ஒரு ஆதார் மாற்றமோ, புது விண்ணப்பமோ செய்திருக்கிறார்கள் கடந்த ஆண்டு. அதை இன்னும் விரிவாக்கம் செய்வது. இரண்டாவது முக்கிய அறிவிப்பு,

**2) பொதுமக்கள் அரசு சேவைகளை எளிதாகவும் விரைவாகவும், அணுகக்கூடிய வகையில் டிஜிட்டல் நிருவா கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, ‘ இ சேவை’ மற்றும் பிற துறைகள் சார்ந்த சேவைகளை ‘வாட்ஸ்ஆப்’ செயலியில் ஒருங்கிணைத்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.**

குடிமக்களுக்கான அரசின் சேவைகள் இணைய வழியில் வழங்கப்படுவதை உறுதி செய்திடும் வகையில், ‘இசேவை’ எனும் முத்திரைத் திட்டத்தி னைத் தமிழ்நாடு மின்னாளுமை முகமை,மாநிலம் முழுவதும் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. 34,843 இசேவை மையங்கள் மூலம், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த குடிமக்களுக்கான 260 சேவைகளைக் குடிமக்கள் இணையவழியில் எளிதாகப் பெற்றிடும் வகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட சேவைகளை, மக்கள் எளிதாகப் பெறும் நோக்கத்தோடு, ரூ.3.85 கோடி செலவில், முதற்கட்ட மாக 50 சேவைகள், பயன்பெறும் வகையில், மக்கள் ‘வாட்ஸ்ஆப்’ செயலி (WhatsApp Application) மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், குடிமக்கள் சேவைகள் (Citizen Services), பயன்பாட்டுக் கட்டணங்களுக்கான பரிவர்த்தனைகள் (Utility Bill Payments), இசேவை’ வலைத்தளம் மூலம் வழங்கப்படும் சேவைகள், ஆகியவை ஒருங்கிணைக்கப்படும். மக்கள் தங்களது ‘வாட்ஸ்ஆப்’ செயலி வழியாக அரசின் சேவைகளைப் பெறுவதன் மூலம், இசேவை மையத்திற்கு நேரடியாகச் செல்வது தவிர்க்கப்படுவதுடன், குறைந்த செலவில் அரசின் சேவைகளை விரைவாகவும் எளிதாகவும் பெற்றிட இயலும்.

தற்போது website வரை செல்ல வேண்டும். இனிமேல் WhatsAppல் message போட்டு result வாங்கி முடித்துவிடலாம் இந்த பிரச்சனையை என்பது முன்னேற்றம்.

**3) பல்வேறு அரசு நலத்திட்ட சேவை வழங்கலில், வெளிப்படைத் தன்மை மற்றும் அவைகளின் செயல் திறனை மேம்படுத்தவும், பயனாளிகளின் அடையாளத்தைச் சரிபார்க்கவும், eKnow Your Customer (eKYC) கைபேசிச் செயலி மற்றும் பாதுகாப்பான எளிதில் விரிவாக்கக்கூடிய பொதுவான eKYC இணையதளம் நிறுவப்படும்.**

ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட நலத்திட்டங்களை (Aadhaar linked welfare schemes) செயல்படுத்த, அனைத்து அரசுத் துறைகளுக்கும் பயனாளிகளின் eKYC தேவைப்படுகிறது. குடிமக்கள், அரசின் சேவைகளைப் பாதுகாப்பான, எளியமுறையில் அணுகிடும் வகையில், கைபேசிச் செயலி (ஆண்ட்ராய்டு மற்றும் iOS) வாயிலாக, முக அங்கீகாரம், கைரேகை, கருவிழி மற்றும் OTP அடிப்படையில் பெற்றிட, பொதுவான “eKYC கைபேசிச் செயலி” (eKYC Mobile App) ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

அரசுத் துறைகளுக்கு eKYC சேவைகளை இணையவழி வழங்கிடும் வகையில், eKYC கைபேசிச் செயலியுடன் இணைந்த, ஒரு ஒருங்கிணைந்த இணையதளம் (Web Platform) உருவாக்கப்படும்.

இந்தப் பொதுவான eKYC இணையதள வசதியை, முதியோர் ஓய்வூதியத் திட்டம், கல்வி உதவித்தொகைத் திட்டங்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) மற்றும் அரசுத் துறைகளு;க கான அடையாளச் சரிபார்ப்பு போன்றவற்றுக்கும் பயன்படுத்த இயலும். இது மாநிலத்தின் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பாகத் திகழும்.

நம் எல்லோருக்கும் தெரியும். Bankல் அவ்வப்போது நாம் யார் என்று நிருபிக்கிற கோரிக்கை வருகிறது அல்லது தேவை வருகிறது.

**4) தமிழ் மின் நூலகத்தைப் பல்லூடகப் பொருண்மைகளுடன் கூடிய தளமாக மேம்படுத்துதல்.**

தமிழ்நாட்டின் வரலாறு, இலக்கியம். பண்பாடு, அரசியல், சமூகம் உள்ளிட்ட தகவல்கள், அச்சு வடிவிலிருந்து மின் வடிவிற்கு மாற்றப்பட்டு, தமிழ் மின் நூலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இதனை, மேம்படுத்துவதற்காகப் பல்வேறு இடங்களிலிருந்து கிடைக்கப்பெறும் ஒளிஒலிச் சுருள்கள், நாடாக்கள், ஒலித்தட்டுகள் அரிய ஒளிப்படங்கள் போன்ற பல்லூடக ஆவணங்களை மின் வடிவில் வழங்குவது இன்றியமையாததாக உள்ளது.

இந்தப் பல்லூடக ஆவணங்களில், அரிய வரலாற்று நிகழ்வுகள், தலைவர்களின் சொற்பொழிவுகள், வாய்மொழி வரலாறுகள், நாட்டுப்புறவியல், ஆகியவற்றின் மதிப்புமிக்க பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

இவற்றை, நவீனத் தொழில்நுட்பத்தில் மின்னுருவாக்கம் செய்து, தமிழ் மின் நூலகத்தில் வெளியிடுவதன் மூலம் இவை பாதுகாக்கப்பட்டு, எதிர்காலத் தலைமுறையினர் பயன்பெறுவது உறுதிசெய்யப்படும்.

### கிராமங்களில் ரூ 200 க்கு இணைய வசதிகள்!

இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு. 202526ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் ஆகும்.

அதாவது multimediaசெல்கிறோம் வெறும், textம், pictureம் இல்லாமல்.

**5) தமிழ் இலக்கியம் / மொழியியல் பயிலும் மாணவர்களுக்கு மொழித் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்.**

தமிழ் இலக்கியம் மற்றும் மொழியியல் பயிலும் மாணவர்களுக்குத் தொழில்நுட்பத் திறன்களை வழங்க, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் மொழித் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள், தமிழ் இணையக்கல்விக் கழகத்தால் வழங்கப்படும். இந்த முயற்சி, மாணவர்களுக்கு இயற்கை மொழிச் செயலாக்கம் (Natural Language Processing NLP), செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்திலான மொழிபெயர்ப்புக் கருவிகள், பேச்சினை அறிதல், உரை பகுப்பாய்வு மற்றும் பிற நவீன மொழித் தொழில்நுட்பங்களில் செயல்முறைப் பயிற்சியை வழங்கும்.

பாரம்பரிய தமிழ் மொழிக் கல்வியையும், நவீன கணினித் தொழில்நுட்ப முறைகளையும் இணைப்பதன் மூலம், மாணவர்கள் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்று, நவீன காலகட்டத்தில் தமிழ் மொழியின் டிஜிட்டல் தள வளர்ச்சிக்குப் பயனுள்ள பங்களிப்பாற்ற இயலும்.

இது TVA மூலமாக.

**6) தொழில்நுட்பத் தயாரிப்பு வடிவமைப்புத் திட்டம் (Technology Product Design Scheme)**

ஆழ்நிலைத் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள், பெரும்பாலும், வடிவமைப்பு மற்றும் சிக்கலான பொறியியல், வளமிக்க செயல்முறைகளை உள்ளடக்கிய வன்பொருள்களைத் தயாரிக்கின்றன. “தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டது” (Made in Tamil Nadu) என்பதனை ஊக்குவிப்பதில் அரசு ஆர்வமாக உள்ளது. அத்துடன், இந்த சிக்கலான உற்பத்தி அம்சங்களை ஊக்குவிக்கும் வகையில், வடிவமைப்பு நிபுணத்துவம் மற்றும் ஆலோசனைகளை ஒன்றிணைத்து, நிகழ்நேர வடிவமைப்புச் சிக்கல்களுக்குக் குறைந்த செலவிலான தீர்வுகளை வழங்குவது அவசியமானதாகும்.

புதிய பொருள் தயாரிப்பு, தொடர் முன்னேற்றம் மற்றும் வன்பொருள் தயாரிப்பு, வடிவமைப்பில் மதிப்புக்கூட்டுதல் ஆகியவற்றை எளிதாக்க, இந்த அரசு, “ஆழ்நிலைத் தொழில்நுட்ப வன்பொருள் தயாரிப்பு வடிவமைப்புத் திட்டம்” (Deep Tech Hardware Product Design Scheme) ஒன்றை வெளியிடும். அழகியலுடன் கூடிய சிறந்த வடிவமைப்பு, மற்றும் வணிகமயமாக்கல் ஆகியவற்றுடன், அவர்களது தயாரிப்பு மேம்பாட்டிற்கு உதவுவதற்காக, அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையின்கீழ் (PPP model) ஒரு புத்தொழில் நிறுவனத்திற்கு 75 சதவீத மானியம் அதிகபட்சமாக 15 இலட்சம் வீதம் வழங்கப்படும்.

இறுதியாக iTNT hub மூலமாக, தொழில்நுட்ப தயாரிப்பு வடிவமைப்பு திட்டம், Technology Product Design Scheme ஊக்குவிக்கும் வகையில் Made in Tamil Nadu என்பதை நிரூபிக்கும் வகையில் Deep Tech மற்றும் பல Hardware modelsஐ, PPP model தனியார் பங்களிப்புடன் iTNTல் செயல்படுத்தப்படும். எனவே, இதைக் கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய நிறைய கருத்துகளுக்கு நன்றி கூறி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலுரை வழங்கினார்.

---

சிவகாசி வட்டம் நெடுங்குளம் கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட

## வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 27 -

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நெடுங்குளம் கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நெடுங்குளம் கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (26.4.2025) காலை சுமார் 10.45 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம் புதுப்பட்டி, சொக்கம்பட்டியைச் சேர்ந்த திருமதி. மாரியம்மாள் (வயது 51) க/பெ.மாரிமுத்து, எஸ் கொடிக்குளம், கூமாப்பட்டியைச் சேர்ந்த திருமதி. திருவாய்மொழி (வயது 48) க/பெ.ராமர் மற்றும் எம் சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த திருமதி.கலைச்செல்வி (வயது 35) க/பெ.விஜயகுமார் ஆகிய மூன்று நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.பாக்கியலட்சுமி (வயது 55) க/பெ.துரைராஜ், திருமதி.கோமதி (வயது 55), திருமதி.பாத்திமுத்து (வயது 55) க/பெ.அப்துல் காதர், திருமதி.ராபியா பீவி (வயது 50) க/பெ.தீன் முகம்மது, திருமதி. ராமசுப்பு (வயது 43) க/பெ.அன்புசெல்வன், திருமதி.லட்சுமி (வயது 40) க/பெ.தங்கப்பாண்டியன், திருமதி.முனியம்மாள் (வயது 40), க/பெ.ஆறுமுகம் ஆகியோருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்க ளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## அன்னம் தரும் அமுதகரம் 66வது நாள்!

### அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கினர்!





சென்னை, ஏப். 27-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 66வது நாள் அம்பத்தூர் தெற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வழிகாட்டுதல்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி ஆகியோர் உணவு வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்பு மிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 66 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.4.2025) அம்பத்தூர் தெற்கு பகுதி 1) வட்டம் 88 கலைவாணர் நகர் மெயின் ரோடு, கழக அலுவலகம் அருகில், சென்னை. 2) வட்டம் 87 அம்மன் கோயில் தெரு பாடி, சென்னை.ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி. எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி ஆகியோர் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இதில் டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிரு ஷ்ணமூர்த்தி அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா (எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்கு மார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---





மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டம் நினைவில் வாழும் திரு. தேவன் அவர்களின் துணைவியாரும், டி. லட்சுமிபதி, டி.ராஜா, இளைஞரணி சகோதரர் டி. மாதவன் ஆகியோரின் தாயாரும்,கழக மகளிர் அணியில் திறம்பட செயலாற்றிய திருமதி. பூசம்மாள் அவர்களின் திருவுருவப்பட திறப்பு நிகழ்ச்சி 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் ஜி குப்பாராவ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு திருவுருவப்படத்தினை திறந்து வைத்து 100 தாய்மார்களுக்கு சேலைகளை வழங்கினார். சி. மூர்த்தி, சி.பாலாஜி, வக்கீல் டி ராஜாராம், டி .திவாகர், பி.செந்தில், இ. கார்த்திக், எஸ். சசிகுமார், ஜே. இளைய பெருமாள், டி .ரவீந்தர் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் வடபெரும்பாக்கம் கழக முன்னோடி

## பூசம்மாள் தேவன் திருவுருவ படத்திறப்பு - நலத்திட்ட உதவிகள்!

### புழல் எம். நாராயணன் - நிர்வாகிகள் பங்கேற்பு!

மாதவரம், ஏப். 27 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் கிளைக் கழகத்தின் மூத்த முன்னோடி நினைவில் வாழும் தேவன் அவர்களின் துணைவியாரும், கழக மகளிர் அணையில் திறம்பட செயலாற்றிய திருமதி பூசம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி வடபெரும்பாக்கத்தில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டம் வடபெரும்பாக்கம் கிளைக் கழக மகளிர் அணி நிர்வாகி நினைவில் வாழும் பூசம்மாள் அவர்களின் திருவுருவ படத்திறப்பு நிகழ்ச்சி அவரது மகன் திரு டி. மாதவன் இல்லத்தில் நடைபெற்றது.

திருமதி பூசம்மாள் அவர்களின் அவர்களின் மகன்கள் திரு டி. லட்சுமிபதி, திரு டி. ராஜா ஆகியோர் துவக்க உரை ஆற்றினார்கள். 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, முன்னால் வடபெரும்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதி ஜி.குப்பாராவ், வட்ட நிர்வாகிகள் சி. பாலாஜி, சி.மூர்த்தி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார்,23வது வட்ட துணைச் செயலாளர் வக்கீல் டி.ராஜாராம், பாக முகவர்கள் டி. திவாகர், எம். மைக்கேல், பி. செந்தில் ,இ. கார்த்திக், எஸ். சசிகுமார்,டி. ரவீந்தர், ஜெ. இளையபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு பூசம்மாள் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து, 100 தாய்மார்களுக்கு சேலைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் எ.பாலகிருஷ்ணன், எம். கோவிந்தன், ஜே. சண்முக சுரேஷ், கே. சண்முக பிரியன், தீயம்பாக்கம் ஜான்சன், வில்சன், ஜி. பூபாலன், எஸ். விஜயன், கொசப்பூர் விஜயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.